In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti

Deposition of Witness

| | |
|---|---|
| CC | 29/2020 |
| PW: | 3 |
| காவல் நிலையம்: | கோவில்பட்டி மேற்கு |
| தேதி: | 23-07-2026 நாள்: வியாழன் |
| பெயர்: | சுப்பிரமணியன் |
| த/பெ: | மாடசாமி |
| ஊர்: | கோவில்பட்டி |
| வேலை: | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| வயது: | 48 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.07.2026**

(Accused present).

**முதல்விசாரணை**

1)நான் தற்போது கோவில்பட்டி மேற்கு காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த கோவில்பட்டி மேற்கு காவல்நிலைய தலைமைக் காவலர் திரு. சிவக்குமார் மற்றும் விசாரணை அதிகாரி உதவி ஆய்வாளர் திரு. பாண்டியன் ஆகியோர்கள் கோவில்பட்டி மேற்கு காவல்நிலையத்தில் பணியாற்றி வந்துள்ளார்கள். எனவே அவர்களது கையெழுத்துகள் நன்கு தெரியும் என்பதாலும் வழக்கு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2) கடந்த 27.01.2019 ம் தேதி 17.45 மணிக்கு கோவில்பட்டி மேற்கு காவல்நிலைய தலைமைக் காவலர் திரு. சிவக்குமார் நிலைய பொறுப்பில் இருக்கும்போது கோவில்பட்டி சாஸ்திரி நகர் வெள்ளத்துரை மகன் சின்னஜமீன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று மேற்படி புகார் மனுவின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 51/2019 இதச பிரிவுகள் 294(b),323,506(ii)

ன் படி வழக்கு பதிவு செய்துள்ளார். **புகார் மனு அ.சா. ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**

**3)** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்மனுவினை இணைத்து நீதிமன்றத்திற்கும் இதர நகல்களை உயர்அதிகாரிகளுக்கும் ஒரு நகலை விசாரணைஅதிகாரியின் பார்வைக்கு வைத்துள்ளார்.

4) பின்னர் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட விசாரணை அதிகாரி 27.01.2019 தேதி 19.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் மாரிச்செல்வம் மற்றும் சித்திரைப்பாண்டி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **( மேற்படி பார்வைமகசர் அ.சா.ஆ.4 ஆகவும் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

5) பின்னர் சாட்சிகள் சின்னஜமீன், சேதுராமன், ஆனந்த்,சித்திரைப்பாண்டி, மாரிச்செல்வம் மற்றும் கோவில்பட்டி மேற்கு காவல்நிலைய தலைமைக் காவலர் திரு. சிவக்குமார் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் .

6) பின்னர் எதிரியை 27.01.2019 ம் தேதி 20.15 மணிக்கு கோவில்பட்டி மேற்கு காவல்நிலையத்தில் வைத்து காரணம் கூறி கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

7) பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவர் திரு. ராஜேஷ் என்பவரை விசாரித்து வாக்குமூலம பதிவு செய்து அவரிடம் இருந்து காயச்சான்று பெற்றுள்ளார். **( மேற்படி காயச்சான்று அ.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

8) இறுதியாக விசாரணை முடித்து கொண்டு எதிரியின் மீது இதச பிரிவுகள் 294(b),323,506(ii) ன் கீழ் 01.02.2019 ம் தேதி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் சொன்ன மாதிரி சொன்னநேரத்தில் புகார் வாங்கியதாக சொன்னதும் அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக சொன்னதும் உண்மையல்ல என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாக சொன்னது உண்மையல்ல என்று சொன்னால் சரியல்ல. சாட்சிகளை விசாரணை செய்ததாக சொன்னது உண்மையல்ல என்றும் என்னுடைய புலன் விசாரணை ஒருதலைபட்சமானது என்று சொன்னால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது )**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்). M. மணிமேகலா, எம்.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.